# பொதுத் துறை

## மானியக் கோரிக்கை எண்.38

## 2015 – 2016

## அறிவிப்புகள்

செல்வி **ஜெ ஜெயலலிதா**
முதலமைச்சர்

தமிழ்நாடு அரசு
2015

# பொதுத் துறை

## அறிவிப்புகள் 2015–2016

**1. முன்னாள் படைவீரர்களுக்கு தொழில்சார்ந்த செயல்திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி வழங்குதல்.**
**Providing Vocational Skill Development Training to Ex-Servicemen.**

முன்னாள் படைவீரர்கள் தகுந்த சுயவேலைவாய்ப்பு மற்றும் குடிமுறை சார்ந்த நிறுவனங்கள் / தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்று பயன்பெறும் பொருட்டு தொடர்புடைய துறைகளின் தேவைக்கு ஏற்றவாறு முன்னாள் படைவீரர்களின் தொழில்சார்ந்த செயல்திறன் மேம்படுத்தப்பட வேண்டும். அதன்பொருட்டு முன்னாள் படைவீரர்களுக்கு தொழில்சார்ந்த செயல்திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க 2015–2016–ஆம் ஆண்டில் ரூ.1 கோடி தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக (TEXCO) நிதியிலிருந்து வழங்கப்படும்.

**2. முப்படைப்பணியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் வீரதீரச் செயல்கள் மற்றும் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக வழங்கப்படும் விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு பணப்பயன்களை உயர்த்தி வழங்குதல்.**

**Enhancement of monetary grants to the recipients of Gallantry Awards and Distinguished Service Medals hailing from Tamil Nadu.**

முப்படைப்பணியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் வீரதீரச் செயல்கள் மற்றும் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக விருது பெறுவோருக்கு தற்போது வழங்கப்படும் பணப்பயன்கள் மற்றும் ஆண்டுதவித் தொகையினையும் சேர்த்து கணிசமான அளவில் உயர்த்தி வழங்கப்படும். பரம் வீர்ச் சக்ரா விருதுக்கான தொகை ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாகவும், அசோக் சக்ரா

விருதுக்கான தொகை ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாகவும், மகாவீர்ச் சக்ரா விருதுக்கான தொகை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.15 இலட்சமாகவும், கீர்த்திச் சக்ரா விருதுக்கான தொகை ரூ.8 இலட்சத்திலிருந்து ரூ.12 இலட்சமாகவும், வீர்ச் சக்ரா விருதுக்கான தொகை ரூ.7.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாகவும், சௌரியச் சக்ரா விருதுக்கான தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சமாகவும் உயர்த்தப்படும். பல்வேறு வகை பதக்கங்களுக்கான பணப் பயன்களும் 50 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை கணிசமாக உயர்த்தப்படும்.

இந்த நலத்திட்டம் மூலம் மாநில அரசிற்கு ஆண்டு செலவினம் தோராயமாக ரூ.50 இலட்சம் ஆகும்.

**3. இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர பணப்பயன் உயர்த்தி வழங்குதல்.**
**Enhancement of the life time monthly financial grant to World War II Veterans.**

இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி ரூ.4000/–த்திலிருந்து ரூ.4500/–ஆக உயர்த்தப்படும். இதன் மூலம் இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த 531 முன்னாள் படைவீரர்கள் பயனடைவர்.

இதற்கு கூடுதல் செலவினம் ஆண்டிற்கு ரூ.31.86 இலட்சம் ஆகும். இச்செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நல நிதி மூலம் செலவிடப்படும்.

**4. டேராடூனில் உள்ள இராஷ்டிரிய இந்தியன் இராணுவக் கல்லூரியில் பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் மாநில அரசின் கல்வி உதவித் தொகை உயர்த்தி வழங்குதல்.**

**Enhancement of Annual State Government Scholarship amount for the students of Tamil Nadu studying in Rashtriya Indian Military College (RIMC), Dehradun.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் இராணுவப் பணியில் சேருவதை ஊக்குவிக்கும் பொருட்டும், உயர்ந்த கல்வி தரத்தினை பெறும் பொருட்டும், டேராடூனில் உள்ள இராஷ்டிரிய இந்தியன் இராணுவக் கல்லூரியில் பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் மாநில அரசின் கல்வி உதவித் தொகை ரூ.12,000/–த்திலிருந்து ரூ.40,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும்.

இதற்கு மாநில அரசின் கூடுதல் செலவினம் ஆண்டிற்கு ரூ.1.12 இலட்சம் ஆகும்.